| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 17/04/2024 | முதல் | 21/04/2024 | |
| அறிக்கை எண் : | 031/ 2024 | வெளியீட்டு நாள் : | | 16/04/2024 | | |

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.04.2024 **முதல்** 15.04.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-04-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/04 | 12/04 | 13/04 | 14/04 | 15/04 | தேதி | நாள்-1 17/04 | நாள்-2 18/04 | நாள்-3 19/04 | நாள்-4 20/04 | நாள்-5 21/04 |
| 0.0 | 0.9 | 8.0 | 2.3 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 5 | 2 | 1 |
| 38 | 38 | 36 | 35 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 36 | 36 | 35 |
| 27 | 28 | 25 | 25 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 24 | 24 |
| 5 | 7 | 6 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 5 | 8 | 7 |
| 63 | 71 | 82 | 83 | 72 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 51 | 84 | 61 | 41 | 64 | | 30 | 30 | 30 | 30 | 20 |
| 8 | 5 | 6 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 8 | 6 | 8 |
| தென் கிழக்கு | வடக்கு | தென் மேற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | வட மேற்கு | தென் கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 19 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-26°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் வடமேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

வருகின்ற நாட்களில் வெப்பநிலை உயர்வின் காரணமாக மண்ணின் ஈரத்தன்மை வெகுவிரைவில் குறைய வாய்ப்புள்ளது.

எனவே சாகுபடி செய்துள்ள தோட்டக்கலைப் பயிர்களை சுற்றிலும் காய்ந்த புற்கள், இலை, தழைகள் மற்றும் பண்ணை கழிவுகளை கொண்டு மூடாக்கு இடுவதால் மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கப்படும்.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (17.04.2024 முதல் 21.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : வாழை, மல்லிகை, கால்நடை.**

**வாழை:**

நிலவும் வறண்ட வானிலையினால் வாழையில் இலைப் பேன் தென்பட வாய்ப்புள்ளதால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மிலி தையோமித்தாக்சைம் அல்லது இமிடாகுளோர்பிட் 5 மிலி என்ற அளவில் ஒட்டுப்பசையுடன் கலந்து தெளிக்கவும்.

**மல்லிகை:**

மல்லிகை பூப்பயிரில் மேன்கனீசு சத்து பற்றாக்குறை பரவலாக தென்படுகின்றது. இவ்வகை சத்துப் பற்றாக்குறையின் காரணமாக இலைகள் மஞ்சள் நிறமாகவும் நரம்புகள் பச்சை நிறமாகவும் காணப்படும். இலைகள் திடமாக மாறிவிடும்.

இதனை நிவர்த்தி செய்ய செடி ஒன்றிற்கு 10 கிராம் மேன்கனீசு சல்பேட்டினை மண்ணில் கலந்து இடலாம் அல்லது அரை சத மேன்கனீசு சல்பேட்டினை இரண்டு வார கால இடைவெளியில் தெளிக்கலாம்.

**கால்நடை:**

நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரித்தல் மிகவும் அவசியமாகும்.

கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாகவும் அதே நேரத்தில் சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறும் அமைக்க வேண்டும்.

அதாவது கொட்டகைகளின் நீள வட்டம் கிழக்கு மேற்காக அமைவது நல்லது. வேகமாக காற்று வீசும் இடங்களில் மரங்கள் வளர்த்தால் காற்றின் வேகத்தை ஓரளவு குறைக்க உதவும்.